

# ஆசிரியர் தகுதித்தேர்வு மாதிரி வினாவிடை

www.kalvisolai.com

## குழந்தை மேம்பாடும் கற்பித்தல் முறைகளும்

210. கற்றலுக்குத் தேவையான குறையறி கணிப்பு தேவைப்படும் போது கருதப் படவேண்டியது
A) முன்னறிவு B) ஆர்வம்
C) கறறல் பாங்கினைத் தேர்ந்தெடுத்தல் D) சமுதாய வயம்

211. ஒவ்வொருவனும் தனது உணர்ச்சிகளையும், அனுபவங்களையும் முழுமையாகவும், நிபந்தனைகள் இன்றியும் ஏற்றுக் கொண்டால்தான் இசைவுள்ள ஆளுமையைப் பெற இயலும் என்றவர்...
A) சிக்மண்ட் பிராய்டு B) கார்ல் ரோஜர்ஸ்
C) மில்லர் D) பண்டுரா

212. ஆளுமையை அளவிடலில் அதிகமாகப் பயன்படுபவை....
A) ஆளுமைப்பட்டியல்கள்
B) புறத்தேற்று நுண்முறைகள்
C) A மற்றும் B D) இவற்றுள் எதுவுமில்லை.

213. படை வீரர்களைத் தேர்ந்தெடுக்கப்பயன்படும் சோதனை.
A) நிலைமைச் சோதனைகள் B) செயற்சோதனைகள்
C) A மற்றும் B D) மைதடச் சோதனை

214. தரஅளவுகோலின் அடிப்படையில் வரையப்படும் வரைபடம்...
A) ஆளுமை வடிவுருவம் B) தரக்கோடு
C) சோதனை வளைவு D) வினாவரிசை

215. தொழில்முறை வழிகாட்டலுக்குப் பெரிதும் பயன்படுவது.
A) நேர்க்காணல் B) தர அளவுகோல்
C) வினாவரிசை D) சோதனை வளைவு

216. திட்டமான அமைப்பற்ற சில பொருட்கள் சோதிக்கப்படு வோனுக்குக் காண்பிக்கப்பட்டு, அதில் அவன் தன் கற்பனையை ஓடவிட்டு புதிய அமைப்பை உருவாக்க முயலும் முறை.
A) பேட்டி முறை B) வினாவரிசை முறை
C) புறத்தேற்று நுண்முறை D) பரிசோதனை முறை

217. புறத்தேற்று நுண்முறைகளில் முக்கியமானவை....
A) மைத்தடச் சோதனை B) பொருளறிவோடு இணைத்தறி சோதனை C) A மற்றும் B D) சூழ்நிலை

218. மைத்தடச் சோதனையை உருவாக்கிய சுவிட்சர்லாந்து நாட்டு உளமருத்துவர்....
A) ஹெர்மன் ரோஷாக் B) முர்ரே
C) மார்கன் D) ஆட்லர்

219. பொருளறிவோடு இணைத்தறியும் சோதனையை (TAT) உருவாக்கியவர்?
A) முர்ரே B) மார்கன்
C) A மற்றும் B D) ஹெர்மன்

220. தடையில்லா அல்லது கட்டுப்பாடற்ற இணைத்தல் சோதனையை உருவாக்கியவர் ?
A) யூங் B) ஆட்லர்
C) ரோஸனாப் D) மார்கன்

221. வாழ்க்கையில் காணப்படும் பல்வேறு சூழ்நிலைகளுக்கும், மனிதத் தேவைகளுக்கும் ஏற்ப இணக்கமான முறையில் நடந்துகொள்வது ?
A) பொருத்தப்பாடு B) நல்சூழல்
C) தேவை நிறைவு D) செயல்பாடு

222. மீத்திறமிக்க பிள்ளைகள் பற்றி டெர்மன் என்பவர் கூறுவதாவது
A) காளைப் பருவத்தில் மன உளைச்சலுக்கு உட்படுகின்றனர்
B) காளைப்பருவ நு.அ.ஈ வில் சராசரி நிலையிலிருப்பர்
C) இளைமையில் சிறப்பாக இருப்பர் ஆனால் காளைப் பருவத்தில் தோல்வியைத் தழுவுகின்றனர்
D) காளைப் பருவத்தில் அவர்கள் தேர்ந்தெடுத்த பணியில் சிறந்திருப்பர்

223. கார்டனர் கூறும் நுண்ணறிவு வகை
A) செயலாற்று திறன் B) ஒழுக்கச் சிறப்பு
C) இசையறிவு D) ஆக்கத்திறன்

224. குறித்த சில ஏலுமைகளை கற்பதற்கான ஆற்றல் (Capacity) ---------- எனப்படும்
A) அடைவு B) நுண்ணறிவு
C) நாட்டம் D) படிப்புப் புலமை

225. பள்ளிக் கூடம் செல்வதற்குத் தயாராகவும், நண்பர்களோடு ஓய்வு நேரத்தில் வெகுவாக விளையாடுவதற்கு விரும்பு வயதாகவும் உள்ள பருவம்
A) குழவிப் பருவம் (infancy)
B) பிள்ளை முன்பருவம் (early childhood)
C) பிள்ளை நடுப்பருவம் (middle childhood)
D) பிள்ளை பின்பருவம் (late childhood)

226. பிறர் சார்பின்மை தனக்கென ஓர் அடையாளம் கருத்தியல் சிந்தனை (abstract thinking) ஆகியன தோன்றும் வளர்ச்சிப் பருவம்
A) பிள்ளை நடுப்பருவம் B) பிள்ளை பின்பருவம்
C) குமரப் பருவம் D) முன் குமரப் பருவம்

227. பல பெரியவர்கள் அறிவில் சிறந்தவர்களாகக் காணப்படுவர். ஆனால் கற்றல் வேகத்தில் குறைபாடு உடையவர்களாக காணப் படுவர். இந்நிலை மனித மேம்பாட்டின் எத்தன்மையினைக் காட்டுகிறது?
A) பன்முகம் (Multi directional)
B) பல் பரிமாணம் (Multi dimentional)
C) வாழ்க்கை முழுவதும் வளர்ச்சி இருக்கும்
D) வளராத் தன்மை

228. கற்றல் கோடு வலியுறுத்திக் கூறுவது
A) சிந்தனைப் போக்கு
B) அழுத்தப்பட்ட நினைவுக் குறிகள் C) மீண்டும் ஊடாடல்
D) உடல் கூறு நிலை ஏற்படும் சிக்கல்கள்

229. பியாஜேயின் கற்றல் மேம்பாடு பற்றிய கோட்பாடு
A) வளரும் குழந்தையிடம் ஏற்படும் சமுதாயச் செல்வாக்கு பற்றியது B) சிந்தனை மேம்பாடு பற்றியது
C) தவறான செயல்களைத் திருத்துதல் பற்றியது
D) புலனியக்க நிலையிலுள்ள சிக்கல்கள் பற்றியது

230. "ஜீன்" என்பதன் கீழ்நோக்கு அழுத்த (Recessive) வடி வங்கள்
A) பல தலைமுறைகளில் நிகழ்கின்றன
B) தூக்கலானவற்றால் அழுத்தப்படுகிறது
C) அது அமைந்துள்ள குரோம்சோமுடன் இணைகின்றன
D) வடிவமில்லாதவை

231. பியாஜேவின் கருத்துப்படி ஒருவர் அனுபவங்களை உணரு முன்னர் அவர்
A) மனத்தளவில் சார்பு படுத்துகிறார்
B) திட்டங்களை உருவாக்குகிறார்
C) பொருத்தமான பயிற்சி பெறுகிறார்
D) தமது நுண்ணறிவால் மேலும் உணருகிறார்

### விடைகள்

| | | | | | |
|---|---|---|---|---|---|
| 210-D | 211-B | 212-C | 213-C | 214-A | 215-B |
| 216-C | 217-B | 218-A | 219-C | 220-A | 221-A |
| 222-D | 223-C | 224-C | 225-B | 226-B | 227-A |
| 228-A | 229-A | 230-A | 231-A | | |

## தாள்–இரண்டு – தமிழ்

201. ஒரு பெண்ணைப் பார்த்து 'மான் கொல்? மயில் கொல்?' என்பது என்ன வழக்கு?
A) செய்யுள் வழக்கு, B) சொல் வழக்கு,
C) மொழி வழக்கு, D) இலக்கண வழக்கு

202. நீட்டி ஒலிப்பதை ---------------என்பர் இலக்கணத்தார்
A) செய்யுள் மொழி, B) அளபெடை,
C) வினைச் சொல், D) பெயர்ச்சொல்

203. திணை எத்தனை வகைப்படும்?
A) 6 வகை, B) 2வகை, C) 10 வகை, D) 13 வகை

204. மனிதர் அல்லாத உயிருள்ளவையும், உயிரற்றவையும்------ ஆகும்
A) உயர்திணை, B) அஃறிணை,
C) ஆண்பால், D) பெண்பால்

205. பெயர் சொற்களை எத்தனை வகையாக பிரிக்கலாம்?
A) 4 வகை, B) 10 வகை, C) 12 வகை, D) 2 வகை

206. பால் எத்தனை வகைப்படும்?
A) 8 வகை, B) 5 வகை, C) 7 வகை, D) 10 வகை

207. பெயர் சொற்களையும், வினைச் சொற்களையும் எத்தனை பால்களாக பிரிக்கலாம்?
A) 5 பால்கள், B) 12 பால்கள்,
C) 10 பால்கள், D) 8 பால்கள்

208. ஒரு பொருளை சுட்டிக் காட்டுவது என்ன எழுத்து?
A) நெடில், B) குறில், C) சுட்டு, D) வினா

209. சுட்டெழுத்துகள் எத்தனை?
A) 12, B) 5, C) 3, D) 10

210. சுட்டு எழுத்துகளில் இன்று நாம் பயன்படுத்தாத சுட்டு எழுத்து எது?
A) அ, B) இ, C) உ, D) எ

211. வினா எழுத்துகள் எத்தனை வகைப்படும்?
A) 5 வகை, B) 7 வகை, C) 10 வகை, D) 12 வகை

212. சொல்லுக்கு முதலில் வரும் வினா எழுத்துகள் யாவை?
A) எ,யா, ஏ, B) அ. ஆ, ஓ,
C) ஊ, ஐ, ஈ, D) கா, கீ, கோ

213. சொல்லுக்கு இறுதியில் வரும் வினா எழுத்துகள் யாவை?
A) அ, ஆ, இ, B) உ, ஊ, எ,
C) ஐ, ஔ, ஆ, D) ஆ, ஓ, ஏ

214. சொல்லுக்கு முதலிலும் இறுதியிலும் நின்று வினாப் பொருளை உணர்த்தும் எழுத்து எது?
A) ஊ, B) ஆ, C) ஏ, D) ஐ

215. சொல்லுக்கு அழுத்தம் தரும் உயிரெழுத்து எது?
A) ஏ, B) ஆ, C) ஈ, D) ஓ

216. அளபெடை எத்தனை வகைப்படும்?
A) 6 வகை, B) 10 வகை,
C) 2 வகை, D) 9 வகை

217. செய்யுளில் ஓசை குறையும்போது அவ்வோசையை நிறைவு செய்ய உயிரெழுத்து நீண்டு ஒலித்தால் அதற்கு என்ன பெயர்?
A) ஒற்றளபெடை, B) உயிரளபெடை,
C) நெடில், D) குற்றியலுகரம்

218. திணை என்பதன் பொருள் என்ன?
A) ஒருவகை தானியம், B) பகுப்பு,
C) பிரிவு, D) ஒழுக்கம்

219. மக்களையும் தேவர்களையும், நரகரையும் குறிக்கும் சொற்களுக்கு என்ன பெயர்?
A) உயர்திணை, B) அஃறிணை,
C) திணை, D) துறை

220. பல பொருள்களை குறிக்கும் சொல்
A) பலவின்பால், B) உயர்திணை,
C) பெயர்ச்சொல், D) வினைச் சொல்

221. பல ஆடவர்களையும், பல பெண்களையும் தொகுதியாக குறிப்பது--------------எனப்படும்
A) பலவின் பால், B) ஒன்றன்பால்,
C) பலர்பால், D) ஆண்பால்

222. ஆண்பால், பெண்பால், பலர்பால் ஆகியவை எந்த திணைக்கு ரியவை?
A) அஃறிணை, B) உரிச்சொல்,
C) உயர்திணை, D) வினையால் அணையும் பெயர்

223 'எண்' எத்தனை வகைப்படும்?
A) இரண்டு வகை, B) நான்கு வகை,
C) ஆறு வகை, D) பன்னிரெண்டு வகை

224. ஒரே பொருளை குறிக்கும் சொல்------------ எனப்படும்
A) ஒரு பொருள், B) பல பொருள்,
C) ஒருமை, D) பன்மை

225. ஒன்றுக்கு மேற்பட்ட பல பொருட்களை குறிக்கும் சொல் -------------- எனப்படும்
A) பலபொருள், B) ஒரு பொருள்,
C) பன்மை, D) எண்ணிக்கை

226. மொழியில் சொற்களை வழங்கும் நிலைக்கு--------------என்று பெயர்
A) பொருள், B) ஏவல், C) இடம், D) காலம்

227. இடம் எத்தனை வகைப்படும்?
A) 6 வகை, B) 3 வகை, C) 7 வகை, D) 10 வகை

228. ஒருவன் சொல்வதை எதிரே நின்று கேட்பவனை குறிப்பது ----------இடமாகும்
A) படர்க்கை இடம், B) தன்மை இடம்,
C) எதிரிடம், D) முன்னிலை இடம்

229. தன்மைப் பெயர்களும் ,முன்னிலைப் பெயர்களும் ------------------- பெயர்களாகும்
A) படர்க்கை இடப் பெயர்கள், B) முன்னிலை இடப்பெயர்கள்,
C) தன்மை இடப்பெயர்கள், D) எதிரிடைப்பெயர்கள்

230. திணை, பால், எண் ஆகியவற்றை உணர்த்தி வந்தால் அது என்ன பெயர்?
A) படர்க்கை பெயர், B) முன்னிலைப் பெயர்,
C) தன்னிலைப் பெயர், D) பெயரெச்சம்

231. ஓர் எழுத்தை இயல்பாக உச்சரிக்க நாம் எடுத்துக் கொள்ளும் கால அளவுக்கு என்ன பெயர்?
A) மாத்திரை, B) வினாடி, C) வினா, D) எண்ணிக்கை

232. மெய்யெழுத்துகளுக்கு எத்தனை மாத்திரை?
A) ஒன்று, B) அரை, C) கால், D) முக்கால்

### விடைகள்

| | | | | | |
|---|---|---|---|---|---|
| 201-A | 202-B | 203-B | 204-B | 205-D | 206-B |
| 207-A | 208-C | 209-C | 210-C | 211-A | 212-A |
| 213-D | 214-C | 215-A | 216-C | 217-B | 218-D |
| 219-A | 220-A | 221-C | 222-C | 223-A | 224-C |
| 225-C | 226-C | 227-B | 228-D | 229-A | 230-A |
| 231-A | 232-B | | | | |

தொடரும் – 8